**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2020**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முறையே அதிகார சபைக்குரிய கிரயம் ரூபா 1,723 மில்லியன் தொகையான 426 வாகனங்கள் மற்றும் ரூபா 179 மில்லியன் கிரயமான கட்டிடங்கள் என்பன 2020 சனவரி 01 ஆந் திகதி வரையில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 258 வாகனங்கள் மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் அந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படாதிருந்த துடன் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை சரிசெய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 285 வாகனங்கள் 2021 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் எஞ்சிய வாகனங்களின் மீள்மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சகல மாகாணங்களையும் மேவுகை செய்யும் வகையில் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் கொவிட்-19 நிலைமையினால் தாமதமடைந்திருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2023 வரையில் சகல கட்டிடங்களையும் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு சொந்தமான சகல வானங்கள், கட்டிடங்களை உள்ளடக்கிய சகல சொத்துக்களும் தற்போதைய நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பெருந் தெருக்களை அபிவிருத்தி செய்யும் போதும், விரிவாக்கும் போதும் மற்றும் அதிவேக வீதியை கட்டியெழுப்பும் போதும் | இது தொடர்பான விடயங்களை பரீட்சித்து பார்க்கப்படுவதுடன் எதிர்காலத்தில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே சொத்துக்கள் பதிவேட்டில் அந்த | பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்யும் போதும், விரிவுபடுத்தும் போதும் கைப்பற்றப்பட்ட காணிகள் இலங்கை |

| | | | |
|---|---|---|---|
| | கைப்பற்றப்பட்டிருந்த ரூபா 84,721 மில்லியன் தொகையான காணி தொடர்பாக சொத்துக்கள் பதிவேட்டில் அந்த காணிகளின் பெறுமதி தனியாக காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. இந்த காணிக் கூறுகளின் உரித்துக்களுக்குரிய எழுத்துமூல சான்றுகள் அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்படாதிருந்த போதிலும் இந்த பெறுமதியில் உள்ள ரூபா 51,262 மில்லியன் தொகையான காணி பெருந்தெருக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற விகிதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது. | காணிகளின் பெறுமதி, வீதியின் கீழ் தனித்தனியாக குறிப்பிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் தனியாக இனங்காணப்படல் வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் மற்றும் கணக்கீட்டு அலகு எண்ணக்கருவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான தலைமையக கட்டிடத்தில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற 72,400 சதுர அடி அளவிற்காக அண்ணளவாக மூலதனமாக்கப்பட்டுள்ள ரூபா 684.49 மில்லியன் மற்றும் அதற்குரிய வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 11.87 மில்லியன் என்பவற்றுக்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பயன்படுத்துகின்ற கட்டிடங்களுக்காக வாடகை செலுத்துவதற்கு திறைசேரி நிதி ஏற்பாடு கிடைக்காதிருந்தமை அறிவிக்கப்பட்டிருந்தது. வரிசை மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற ஏனைய சொத்துக்களுடன் இந்த கட்டிட பகுதிகளையும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரமும், கணக்கீட்டு அலகு எண்ணக்கருவின் பிரகாரமும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய தலைமையக கட்டிடத்தில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சு பயன்படுத்துகின்ற 72,400 சதுர அடி அளவான அளவு அந்த நிறுவனங்களுக்கு கையளித்தல் மற்றும் மேந்தலை செலவின |

| | | | |
|---|---|---|---|
| | | | விகிதத்தின் கீழ் பகிர்ந்தளித்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்காதிருந்த தெலங்கபாத்த பொலிஸ் இற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயமான ரூபா 80.8 மில்லியன் மற்றும் அந்தக் கட்டிடத்தின் வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 4.04 மில்லியன் என்பன அதிகார சபையின் கணக்குகளில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | அதிவேக வீதி பொலிஸ் பிரிவு அந்த வீதிகளின் செயற்பாடுகளுக்காக நேரடியாக தொடர்புபடுகின்றமையால் வீதியை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பு மற்றும் வசதிகள் வழங்கப்படுகின்றது. அவர்கள் வெளிவாரி நடவடிக்கைகளில் தொடர்புபடாதிருந்தமையால் மற்றும் அந்த மோட்டார் வாகன கட்டுப்பாட்டின் மூலம் அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்கின்றமையால் இந்தக் கட்டிடம் அதிகார சபையின் சொத்தாக கருதுதல் கணக்கீட்டு நியமத்திற்கு உரியதாகும். இது தொடர்பாக வரிசை அமைச்சு எதிர்வரும் கணக்காய்வு குழுவில் சமர்ப்பித்து தீர்மானம் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்காதிருந்த தெலங்கபாத்த பொலிஸ் இற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் நியதிகளுக்கு முரணாக அதிகார சபையினால் காலாவதியாகும் காலம் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட ஏனைய முதலீடுகள் ரூபா 1,940 மில்லியன் காசு மற்றும் காசுக்கு சமமானவையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம். | காலாவதியாகும் காலம் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட ஏனைய முதலீடுகள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் இனங்காணப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம் மற்றும் அதிகார சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம், இருப்புக் கிரயம் மற்றும் தேறிய தேறக் கூடிய பெறுமதி இந்த | வீதி பராமரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற இருப்புக்கள் முன் உள்ளே, முன் வெளியே விநியோகித்தலின் கீழ் கணிப்பீடு செய்யப்படுகின்றது. கையில் உள்ள இருப்புக்கள் | அதிகார சபை தமது இறுதி இருப்புக் கிரயம் மற்றும் தேறக்கூடிய பெறுமதி இந்த இரண்டில் குறைந்த |

| | | |
|---|---|---|
| இரண்டில் குறைந்த தொகை பெறுமதியாக கொள்ளப்பட வேண்டுமென காண்பிக்கப்பட்ட போதிலும் அதிகார சபையினால் இருப்புக்களின் தேறிய தேறக் கூடிய பெறுமதிக்கு கணிப்பிடப்படாமல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இருப்பின் அடிப்படையில் பெறுமதியிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தொடர்பான தகவல்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொகையில் பெறுமதி அறிக்கையிடப்படல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் மீளாய்வாண்டின் போது முதல் தடவையாக வீதி சொத்துக்களில் வேறாக்கப்பட்டு இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட போதிலும் கண்டி சுரங்க வீதியின் கடைகள் அமைந்துள்ள நிலம் மற்றும் அந்த கடைகளுக்குரிய பெறுமதி முறையே ரூபா 8.82 மில்லியன் மற்றும் ரூபா 84.66 மில்லியன் ஆக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக காண்பிக்கப்பட்ட போதும், அவ்வாறு மேற்கொண்டதற்குரிய கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முன்னாள் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் சுரங்க வீதிகளில் நிர்மாண கிரயம் செலவினமாக பதிவழிக்கப்படல் வேண்டும். அவ்வாறே தற்போது பயன்படுத்தப்படுகின்ற பெறுமானத்தேய்வு கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்வதாயின் கட்டிடங்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதி தற்போது பூச்சியமாகும். அதன் பிரகாரம் மதிப்பீட்டுப் பெறுமதி மீள்மதிப்பீட்டு மிகையாக ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது. கணக்கீட்டு கொள்கை மற்றும் சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உரிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உண்மையான விடயப் பரப்பிற்கு புறம்பாக உள்நாட்டு வங்கி நிதியம் மற்றும் | - மேறபடி - | உரிய கணக்கீட்டு கொள்கைகளையும் உள்ளடக்கிய விரிவான கணக்கீட்டு |

கிராமிய வீதி செயற்திட்ட அலகின் மூலம் அமுல்படுத்தப்படுகின்ற தேசிய, பிரதேச மற்றும் கிராமிய ரீதியில் 100,000 கிலோ மீற்றர் மாற்று பாதைகளை புனரமைக்கும் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது அரைப்பகுதி பூர்த்தி செய்யப்பட்ட தேசிய பெருந்தெருக்களுக்கு உரித்தற்ற வீதிகளுக்காக ரூபா 11,242 மில்லியன் தொகை சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்த துடன் அவை முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் செலவினமாக பதிவழித்தமை மாத்திரம் நிதிக்கூற்றுக்களுடனான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இந்த வீதிகள் உரிய மாகாண சபைக்கு அல்லது உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அதற்கு ஈடாக மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்களுக்குரிய கணக்கீட்டு கொள்கைகளையும் உள்ளடக்கி விரிவான கணக்கீட்டு கொள்கையொன்று தயாரித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

கொள்கையொன்று தயாரித்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அதிகார சபைக்கு சொந்தமான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் மொத்த தூர அளவு 12,225 கிலோ மீற்றர் ஆக இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 105 வீதிகளுக்குரிய 2,237 கிலோமீற்றர் அளவு மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 9,988 கிலோமீற்றர் தூர அளவான A மற்றும் B தரங்களுக்குரிய பெருந்தெருக்களின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் தவறவிடப்பட்டிருந்தது. மேலும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வீதி பிரிவு உதவி செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 37,040 மில்லியன் கிரயமான 627.78 கிலோ மீற்றர் வீதியை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதி மூலதனமாக்கல் தொடர்பாக தாபிக்கப்பட்டுள்ள 02 விசேட குழுக்கள் மற்றும் TCAM செயற்திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட முறைமையொன்று 2022 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2021-2023 ஆம் ஆண்டுகளின் போது வீதிகள், காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்குவதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. | அதிகார சபைக்குரிய சகல பெருந்தெருக்களும் குறித்துரைத்த நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) அதிகார சபை பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு | DBST செயற்பாடுகளின் கீழ் பயன்படுத்தப்படாத 11 Aggregate & Chip Spreader இயந்திரங்களுக்கு உரியதாக இந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இழப்பீட்டிற்குள்ளான சொத்துக்களை குறிப்பாக இனங்கண்டு அச் சொத்துக்கள் தொடர்பில் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 349.19 மில்லியன் தொகையான சொத்துக்களின் இழப்பீட்டிற்காக இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இழப்பீட்டிற்கான சொத்துக்கள் குறிப்பாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. இதனால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்களில் நியாயமான பெறுமதி மேற்கூறப்பட்ட அளவினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த சொத்துக்களின் தற்போதைய பெறுமதி குழுவொன்றின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வெளி சுற்றுவட்டப் பாதை கட்டம் II செயற்திட்டத்தில் கையளிக்கப்பட்டிருந்த 11 ஏக்கர் அளவான 07 காணிக் கூறுகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 07 காணிக் கூறுகளில் 03 கூறுகள் தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மிகுதி காணிகள் தொடர்பான தகவல்கள் கிடைத்ததன் பின்னர் தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | உரிய காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | தெற்கு அதிவேக வீதி செயற்திட்டத்தினால் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 6.86 மில்லியன் கிரயமான 03 உள்ளக இடமாற்றல் நிலையங்கள் அதிகார சபையின் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம். | உரிய சொத்துக்கள் உரிய காலப்பகுதியின் போதே நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |
| (உ) | திடீர் விபத்துக்களினால் அதிவேக வீதிகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 4.6 மில்லியன் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய மீதியாக | கொவிட்-19 இன் காரணமாக தகவல்கள் உரிய நேரத்தில் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தமையால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | தவறவிடல் வழுக்களை குறைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | 2006 முதல் 2017 வரையான ஆண்டுகளின் போது பல்வேறு வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் இருந்தும் மற்றும் ஏனைய திட்ட முறைமைகளின் கீழும் கிடைத்த ரூபா 1,304.17 மில்லியன் பெறுமதியான நலிவடைந்த பாலங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தப்படுகின்ற கணனி தகவல் முறைமை அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக சரியான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது. | தவறவிடல் வழுக்களை குறைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (எ) | 2020 ஆம் ஆண்டின் போது மூடப்பட்டிருந்த பாதனிய - அனுராதபுரம் வீதி செயற்திட்டம், இராஜகிரிய பொல்கஹவெல மற்றும் கணேமுல்ல மேம்பாலம் நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் பிரதேச பால செயற்திட்டத்தின் கட்டம் II என்ற செயற்திட்டங்களிலிருந்து அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட முறையே 9.6 மில்லியன், ரூபா 27 மில்லியன் மற்றும் ரூபா 9.9 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 46.5 மில்லியன் தொகையான நடைமுறை பொறுப்புக்கள் அதிகார சபையினால் தமது கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | தவறவிடல் வழுக்களை குறைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடுகளை வலுப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | | |
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கணக்குகளில் காண்பிக்கப் படுகின்ற கட்டிடங்கள் மற்றும் வாகனங்க ளுக்கான பெறுமானத்தேய்வு ஒதுக்கங்களின் ஆரம்ப மீதி, ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு மற்றும் ஆண்டின் இறுதியில் பெறுமானத் தேய்வு ஒதுக்கம் என்ற மீதிகள் மற்றும் அதற்குரிய சொத்து பதிவேட்டின் மீதிகளுக்கு இடையே முறையே ரூபா 72.65 மில்லியன் மற்றும் ரூபா 77 மில்லியன் தொகையான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | 8,640.043 | 8,490.393 | 149.65 | கணக்காய்வு பந்தியடன் இணங்குகின்றோம். | இவ்வாறான முறையில் வழுக்கள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் செயற்திட்ட சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் மேந்தலைக் கட்டுப்பாட்டு கணக்கின் பிரகாரம் கிடைக்க வேண்டிய மீதி மற்றும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் உரிய அதிகார சபைக்கு செலுத்த | 24,255,888 | 10,492,350 | 13.76 | உரிய கணக்கு குறிப்புக்கள் செயற்திட்டக் கணக்குகளில் உரிய காலப் பகுதியில் கணக்கீடு செய்தல் மற்றும் அதிகார சபையின் கணக்குகளின் பற்றாக்குறை / மிகை கணிப்பீடுகள் | அதிகார சபையினதும் செயற்திட்டங்களினதும் கணக்குகள் காலரீதியில் இணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த சம்பளம் மற்றும் மேந்தலை செலவின மீதிகளில் ரூபா 13.76 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. எனினும் இந்த வேறுபாட்டிற்கான காரணம் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்க வில்லை. | | | | அதற்கு காரணமாக இருந்தது. | |
| (இ) | நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்குரிய சீராக்கங்கள் குறித்துரைத்த பிரகாரம் மேற்கொள்ளாமையால் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட மஹநெகும வீதி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண (தனியார்) கம்பனிக்கிடையிலான நடைமுறைக் கணக்குகளுக்கு இடையே ரூபா 970 மில்லியன் தேறிய வேறுபாடு காணப்பட்டது. மேலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனியார்) கம்பனிக்கிடையேயான நடைமுறைக் கணக்குகளுக்கு இடையிலும்) கூட்டுமொத்தமாக ரூபா 18.29 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 6,110.08 | 5,121.79 | 988.29 | வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண (தனியார்) கம்பனியின் நடைமுறைக் கணக்குகளுக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட இணக்க அறிக்கை மற்றும் வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ (தனியார்) கம்பனிக்கிடையே ரூபா 10.3 மில்லியனுக்குரிய இணக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. | அதிகார சபையின் துணைக் கம்பனிக்கு இடையிலான மீதிகளின் இணக்கம் காலரீதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.5 பகுதி மதிப்பீடு அல்லது மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் கணக்குகளில் கிரயம் குறிப்பிடப்படாத 53 மோட்டார் வாகனங்கள் காணப்பட்ட போதிலும் இந்த மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட்-19 வைரசின் காரணமாக சொத்துப் பதிவேடை சரிசெய்வதற்கு முடியாதிருந்தது. ஒட்ட நிலையில் காணப்படாத வாகனங்களை விற்பனை செய்வதற்கோ அல்லது அழிவடையச் செய்வதற்கோ அங்குலானை வேலைப் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்கள் இந்த ஆண்டின் போது மெய்மையாய்வு செய்யப்படும். | அதிகார சபையின் சகல சொத்துக்களும் நியாயமான பெறுமதியில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | |
| அதிவேக விதி நிர்மாணத்திற்காக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய வரிசை அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் அதிகார சபையின் சொத்துக்களுக்கு கொண்டு வந்து அரச மானியக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த தொகை அரச மானியங்களின் பெறுமதி மற்றும் கிரயக் கணக்கீட்டிற்கு அடிப்படையான உபயோக ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 606,419 | உரிய பெறுமதி அதிகார சபையின் மானியமாக எடுப்பதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட எழுத்து மூல சான்றுகள் | பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2021.05.07 ஆந் திகதிய PED/E/RDA/3/111/(i) ஆம் இலக்க கடிதத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | உரிய பெறுமதியை அதிகார சபைக்கு மானியமாக எடுப்பதற்காக அதிகார சபைக்கு வழங்கப்பட்ட போதியளவான எழுத்து மூல சான்றுகளை சமர்ப்பித்தல் மற்றும் அந்த சான்றுகளின் அடிப்படையில் உரிய மானியங்களை கணக்கு வைத்தல். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் இடம்பெற்ற திடீர் விபத்துக்களில் அதிவேக வீதிக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 06 மில்லியன் தொகையை உள்ளடக்கிய அதிவேக வீதியின் செயற்பாடுகள், மற்றும் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் திடீர் விபத்து நட்டம் என்பன ரூபா 10.3 மில்லியன் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்பட்ட சில விபத்துக்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உரிய அறவிட வேண்டிய பணத்தை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் விபத்துக்களினால் அதிவேக வீதிக்கு ஏற்பட்ட நட்டத்தை மதிப்பிடும் செயற்பாட்டை முறைமைப்படுத்து வதற்கான அங்கீகாரமொன்றை அறிமுகப்படுத்துதல். |
| (ஆ) | அதிகார சபையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோரின் கீழ் ரூபா 16,128 மில்லியன் பெறுமதியில் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக அதிகார சபைக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, முதலீட்டு சபை, சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்திலிருந்து ரூபா 1,073 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. | அறவிடுவதற்குள்ள சில மீதிகள் தொடர்பாக இணக்கம் செய்யப்படுவதுடன் மேலும் சில மீதிகளை தீர்த்து வைப்பதற்காக நிதியேற்பாடு கிடைத்துள்ளது. முதலீட்டு சபையின் மீதி தொடர்பாக இதுவரை பணம் கிடைத்திருக்கவில்லை. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சேவைப் பங்களிப்பாளர் வைப்பு மீதி ரூபா 3,334.9 மில்லியன் ஆகும். இந்த மீதியில் 2 - 4 வருடங்களுக்கிடையே தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதி ரூபா 1,735.26 மில்லியன் ஆக இருந்ததுடன் இதில் 62 சதவீதத்திற்கு சமனான ரூபா 1,075.45 மில்லியன் மேல் மாகாண அலுவலகங்களில் தீர்க்கப்படாது காணப்படுகின்ற மீதிகளாகும். | தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்களில் நடைமுறை மீதி மாத்திரம் மிகுதியாக இருக்கும் படி ஏனைய மீதிகள் வருமானத்திற்கு எடுக்கப்படல் வேண்டும். |

### 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கலின் கீழ் வரையறுக்கப்பட்ட மகநெகும இமல்சன் உற்பத்தி (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 5.14 மில்லியன் தொகையில் நிறுத்தி வைத்தல் பணமாக ரூபா 2.4 மில்லியன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது. | இதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மீண்டும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பணம், மீதி உறுதிப்படுத்தல் களை தீர்த்து வைப்பதற்கு அல்லது பொருத்தமான கணக்கீட்டு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) வரையறுக்கப்பட்ட மகநெகும மதியுரை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ கம்பனியின் செயற்திட்டங்களுக் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பண மீதிகளை உறுதிப்படுத்தியதன் பின்னர் தீர்த்து வைப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | குரியதாக செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணமான 16.22 மில்லியன் தொகையில் ரூபா 12.24 மில்லியன் அதாவது 75.5 சதவீதம் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைக்கப்படாமல் காணப்பட்டது. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 201 | ஆளணி வேதனங்கள் தொடர்பான அதிகாரம் வழங்குதல், அங்கீகரித்தல், உறுதிப்படுத்துதல் மற்றும் கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரினால் இந்த பிரமாணங்களுக்கு புறம்பாக அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவை விஞ்சி பிழையான சம்பள குறியீட்டின் அடிப்படையில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | புதிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட சம்பளக் குறியீட்டிற்கு இணங்க உள்ளக பதவி உயர்வுகளை வழங்குதல் மற்றும் உரிய சம்பள குறியீடு / படிமுறைகளை வழங்குதல் தற்போதும் மேற்கொள்ளப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றதன் பின்னர் தற்போது அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியணியினர் எண்ணிக்கை வெற்றிடங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டிகளுக்கு இணங்க நிரப்புவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப் பட்ட சம்பள அளவினை விஞ்சி பிழையாக சம்பள குறியீட்டு அடிப்படையில் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தாதிரு த்தல் வேண்டும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டிகளுக்கு இணங்க மாத்திரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் / சம்பள குறியீடு, பதவிகளுக்குரிய அடிப்படை தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் இன்றிய பதவிகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | நிதிப்பிரமாணம் 762 | பொருத்தமான இருப்பு முகாமைத்துவமொன்று பேணிச் செல்லப்படாமையால் 05 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய ரூபா 2.6 மில்லியன் கிரயமான இருப்பு மீதி விளைவற்று காணப்பட்டது. | இது தொடர்பாக மாகாண அலுவலகங்களிலிருந்து தகவல்கள் கோரப்பட்டுள்ளது. | பொருத்தமான இருப்பு முகாமைத்துவத்தை பேண வேண்டி இருந்ததுடன் இருப்பிற்காக தேவையற்ற பணம் முதலீடு செய்யப்படாதிருத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 763 | கணிசமான அளவில் இருப்பினை வைத்திருக்கும் போது பேணிச் செல்லப்பட வேண்டிய களஞ்சிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | தேவையான அறிவித்தல்களை வழங்குவதற்கு சுற்றுநிருபம் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது | களஞ்சிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் அதிகார சபையினால் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை<br>------------------------ | | | |
| (i) | 1 ஆம் பிரிவு | அதிகார சபையினால் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படா திருந்ததுடன் | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன் படிக்கையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கோ அல்லது செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்து வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | கைச்சாத்திடு வதற்கு செயலாற்றல் மதிப்பீட்டு முறைமை யொன்றை அறிமுகப் படுத்துதல் வேண்டும். |
| (ii) | 5 ஆம் பிரிவு | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 8.3.9 ஆம் பிரிவு | அதிகார சபைக்குச் சொந்தமான ரூபா 215.72 மில்லியன் பெறுமதியான 70 வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகார சபையின் தலைமை அலுவலக கட்டிடத்தில் 72,400 சதுர அடி அளவு பெருந்தெருக்கள் அமைச்சின் பாவனைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 72, 400 சதுர அடிக்குரிய பராமரிப்புச் செலவினம் மற்றும் பயன்பாட்டுச் செலவினங்களும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | RCDC நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் ஆராயப்படுவதுடன் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் தற்காலிக அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. மகநெகும நிறுவனத்திற்கு வாடகை உடன்படிக்கையுடன் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களை உள்ளடக்கிய சொத்துக்கள் இந்த சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்குவது தவிர்க்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 9.12 ஆம் பிரிவு | நலன்புரி நடவடிக்கைகளுக்காக செலவிடுவதற்காக பொது திறைசேரியிலிருந்து முன் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் பதவியணியினர் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக அந்த அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வில்லை. | மேற்கூறப்பட்ட உயர் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் தீர்மானம் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நலன்புரி நடவடிக்கை களுக்காக செலவிடுவதற்கா க பொது திறைசேரியின் முன் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஈ) | 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 30 ஆம் இலக்கம் மற்றும் 2009 யூன் 01 ஆந் திகதிய 30(I) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கும் வழிகாட்டிகளுக்கும் இணங்க தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறைகள் தயாரிப்பதன் கீழ் அந்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு பரிந்துரையை அமுல்படுத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த நியதிகளை கவனத்தில் கொள்ளாமல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்படாத சம்பள அளவின் அடிப்படையில் புதிய | 2005 ஆம் ஆண்டு வரை ஆட்சேர்ப்பு நடைமுறை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டிருந்தது . புதிய ஆட்சேர்த்தல் நடைமுறை இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் சகல ஆட்சேர்த்தல்களும் மற்றும் பதவியுயர்வுகளும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள குறியீடுகளுக்கு புறம்பாக பதவியுயர்வுகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. | அதிகார சபையின் ஆட்சேர்த்தல் நடைமுறையை விரைவாக அங்கீகரித்துக் கொள்ளுதல், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நியதிகளுக்கு புறம்பான கொடுப்பனவுகளை சரிசெய்தல் மற்றும் மேலதிக செலுத்துதல்கள் தொடர்பாக செயற்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து உரிய பணம் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதவிகளுக்காக சம்பள படிமுறைகள் வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சம்பள படிமுறையை விஞ்சி உயர் சம்பள படிமுறையில் வைக்கப்பட்டதன் காரணமாக 2020 ஆம் ஆண்டின் போது மாத்திரம் அதிகார சபை மேலதிகமாக செலுத்திய சம்பளம் அண்ணளவாக ரூபா 157 மில்லியன் ஆகும். | | |
| (உ) | 2006 இன் தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவை | | | |
| (i) | 4.2.1 (அ), (ஆ) மற்றும் (உ) பிரிவுகள் மற்றும் 4.2.2 (அ) பிரிவு | ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக தயாரிக்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் சட்டரீதியாக நாளதுவரையாக்கப்பட வேண்டிய பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகை செயற்பாடுகளின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக விபரிக்கும் பெறுகை கால அட்டவணையொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பிரதான பெறுகை திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை என்பன தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 3.4.3 (அ) பிரிவு | அறிவித்தல் பிரசுரித்தல் பொருளாதார ரீதியில் பாதகமான குறைந்த பெறுமதியுடைய விடயங்கள் மற்றும் | கொவிட் - 19 மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் முழுமையாக பதிவுசெய்யும் செயற்பாடுகளை | வழங்குனர்களை பதிவு செய்யும் போது குறித்துரைத்த திட்ட முறைமை பின்பற்றப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற விடயங்களை கொள்வனவு செய்யும் போதும், வழங்குனர்களை செய்யும் போதும் குறித்துரைத்த முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | பூர்த்திசெய்ய முடியாதிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கூறுவிலைகளுக்காக பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் மற்றும் குறைவான விலைகளுக்காக முத்திரையிடப்பட்ட கூறுவிலைக் கோரல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. | வேண்டும். |
| (iii) | 8.10.1 ஆம் பிரிவு மற்றும் 8.11.4 (அ)(i) ஆம் பிரிவு | அதிகார சபையினால் கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத் தளத்தில் அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்திலோ பகிரங்கப்படுத்தப்படாதிருந்ததுடன் ஒப்பந்தத்தை புறக்கணிக்கும் வழங்குனர்கள் தொடர்பான தரவு மூலமோன்று பேணப்பட்டிருக்க வில்லை. | இணையத்தளத்தை நவீனமயப்படுத்தியதன் பின்னர் தகவல்களை பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தேசிய போட்டியாளர் பெறுகைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் தொடர்பான விபரங்கள் தற்போது இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. வெற்றி பெறாத கேள்விதாரர்களை இனங்காண்பதற்கான தரவு மூலமொன்றை பேணிச் செல்லல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான கேள்விதாரர்களிடமிருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஒப்பந்தங்களை புறக்கணிக்கின்ற ஒப்பந்தகாரர்களின் பாதுகாப்பு பிணைமுறியை பணமாக்கி அதிகார சபைக்கு பெற்றுக்கொண்டு உரிய ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கையளிக்கப் பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பான தகவல்கள் அதிகார சபையின் இணையத் தளத்திலோ அல்லது ஏனைய பொருத்தமான ஊடகத்திலோ பகிரங்கப்படுத்து தல் வேண்டும். ஒப்பந்தங்களை புறக்கணிக்கின்ற வழங்குனர்கள் தொடர்பான தரவு மூலமொன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 4.3.1(அ), 5.3.3 மற்றும் 7.8.4(உ) ஆம் பிரிவுகள் | அதிகார சபையினால் 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப் பட்டிருந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 463 மில்லியன் தொகையான டிப்பர் வாகன சேவையை பெற்றுக்கொள்ளல், கருங்கல் கொள்வனவு செய்தல், வெப்பத் தாங்கல் பொருட்களை கொள்வனவு செய்தல் மற்றும் பிட்டுமின்ஸ் இமெல்சன் கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைகள் தொடர்பாக முறையான மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்காமை, கேள்வி ஆவணங்களில் பெறுகையின் தேவையை விபரிக்கும் விபரங்கள் காணப்படாமை மற்றும் நியாயமான பதில்கள் காண்பிக்கப்படாத கேள்விகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தியமை போன்ற விடயங்கள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. | மதிப்பீட்டிற்காக தற்போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. பெறுகை வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில் கேள்வி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும். | பெறுகைகள் தொடர்பான முறையான மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிப்பதற்கும், கேள்வி ஆவணங்களில் பெறுகைத் தேவைகளை விரிவாக விபரிப்பதற்கும் மற்றும் நியாயமானரீதியில் பதிலளிக்கப்படாத கேள்விகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தாமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல். |
| (v) | 5.4.10 (ஆ) ஆம் பிரிவு | ரூபா 251 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய பெறுகை தொடர்பான செயலாற்றல் காப்பீடு குறித்துரைத்த பிரகாரம் பெறப்படாதிருந்ததுடன் மேலும் ரூபா 100 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய | செயலாற்றல் காப்பீடு ஒன்றை குறித்த பிரகாரம் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கபடவதுடன் காணப்படுபகின்ற குறைபாடுகளை இனங்கண்டு தகைமைகளை பரீட்சித்து தகுதியான | செயலாற்றல் காப்பீடொன்றை குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கும் சாத்தியமற்ற கூற்று உப அளவிடைப் பகுப்பாய்வுகள் செய்யாமல் இருப்பதற்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுகையொன்று தொடர்பாக சாத்தியமான உப அளவிடைப் பகுப்பாய்வுகள் மற்றும் கேள்விதாரர்களின் பின்புலமாயுள்ள தகைமைகளை பரீட்சித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல் தொடர்பில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மற்றும் கேள்விதாரரின் தகைமைகளைப் பரீட்சித்தலும் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (vi) | 8.9.1 (ஆ) பிரிவு | முறையான ஒப்பந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை அல்லது உடன்படிக்கைகளில் கைச்சாத்திடும் போது கவனத்தில் கொள்ளக்கூடிய காலதாமதம் ஏற்பட்டிருந்தது. | கொவிட்-19 நிலைமையின் அடிப்படையில் காலதாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் எதிர்காலத்தில் அவற்றை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான ஒப்பந்த உடன்படிக்கை களில் உடனடியாக கைச்சாத்திடு வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | 8.8.1 (அ) பிரிவு | சித்திபெறாத கேள்விதாரருக்கு அந்தக் கேள்விகள் சித்தி பெறாமைக்கு தாக்கமளித்த காரணங்களுடன் அறிவிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் பெறுகை நிறுவனத்தினால் அவ்வாறான அறிவித்தல்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வாய்மொழி ரீதியான விளக்கமளித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் எழுத்துமூலம் அறிவித்தல் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | சித்திபெறாத கேள்விதாரருக்கு அந்தக் கேள்விகள் சித்தி பெறாமைக்கு தாக்கமளித்த காரணங்களுடன் அறிவித்தல் வேண்டும். |
| (ஊ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட ரூபா 52,056 மில்லியன் வருமானத்தில், ரூபா 15,000 மில்லியனுக்கு அண்ணளவான தொகையொன்று அதாவது | அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் ரூபா 1,500 மில்லியன் வருமானம் மத்திய அதிவேக வீதியின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன் | அதிவேக வீதியின் வருமானம் செலவினங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட வர்த்தமானி பத்திரத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிவிசேட வர்த்தமானியின் 07 ஆம் பந்தி என்பவற்றின் பிரகாரம் அவ்வாறு சேகரிக்கப் படுகின்ற கட்டணம் அதிகார சபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டி இருந்ததுடன் கட்டணத்தை அறவிட்டு தேசிய பெருந் தெருக்கள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக அந்த நிதியம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | வருமானத்தில் 30 சதவீதம் அளவு நிலையான வைப்பு மற்றும் திறைசேரி அனுப்புதலாக வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதி 70 சதவீதமான தொகை அதிவேக வீதியின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கும் மேற்கூறப்பட்ட வர்த்தமானியில் நியதிகளுக்கும் புறம்பான வகையில் அதிகார சபையின் மேந்தலைச் செலவினங்கள், சம்பளக் கொடுப்பனவு மற்றும் செயற்திட்டங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர் களுக்கான வசதிகள் வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. | தொகையின் பிணை வைப்பாக வைக்கப்பட்டுள்ளது. திறைசேரியிலிருந்து வரி அறவிடலாக ரூபா 4,000 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. அதிவேக வீதியிலிருந்து கிடைக்கின்ற வருமானம் திறைசேரியின் அனுமதியுடன் சம்பளம் செலுத்தும் போது ஏற்படுகின்ற நிதியத்தின் பற்றாக்குறைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. அதிவேக வீதிகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான செலவினம் அதிவேக வீதியின் வருமானத்தில் தீர்க்கப்படுவதுடன் பொலிஸ் பிரிவின் கடமை நடவடிக்கைகள் நேரடியாக அதிவேக வீதியின் செயற்பாட்டு நடவடிக்கைகளாக இருந்தமையினால் அந்த செலவினமும் அதிவேக வீதியின் வருமானத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | எடுத்தல் வேண்டும். மேலும் பொலிஸ் திணைக்களத்திற்காக செய்யப்பட்ட செலவினம் அத்தியவசியவான செலவினங்களுக்கு வரையறுத்தல் வேண்டும். |
| (எ) | 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டம்<br>-------------------------- | | | |
| (i) | 4(3) ஆம் பிரிவு | வீதி அபிவிருத்தி அதிகார சபை, உரிய மாகாண சபை, உரிய உள்ளுராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களினால் கையேற்கப்பட்டுள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்கள் குறித்த ரீதியில் காண்பிக்கப்பட்ட | கொவிட்-19 இன் காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியீனமாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்களின் போது இந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்கு சமனான பணிகள் | சட்டத்தின் தேவைப்பாட்டின் பிரகாரம் ‘‘ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம்’’ தயாரிக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ''ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்'' தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிறைவேற்றப்பட்டிருந்தது. | வேண்டும். |
| (ii) | 6(1) ஆம் பிரிவு | உயர் வீதி முறைமை கொள்கையொன்றை தயாரிப்பதற்கும், தந்திரோபாய அபிவிருத்தி செய்வதற்கும், வீதிகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கை எடுப்பதற்கும், அதிகார சபையினால் அனுப்பப்படுகின்ற வீதி திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் தாபிக்கப்பட வேண்டிய ''வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனைக் குழு'' தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | கொவிட்-19 இன் காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் தேவையின் பிரகாரம் ''வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனைக் குழு'' தாபிக்கப்படல் வேண்டும். |
| (iii) | 7(1) ஆம் பிரிவு | சகல மாவட்டங்களுக்காகவு ம் ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்தல், வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்புபடுத்துதல் | கொவிட்-19 இன் காரணமாக இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு வசதியீனமாக இருந்தது. மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டங்களின் போது வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு தொடர்பான விடயங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிக்கையிட்டிருந்தது. | சட்டத்தின் தேவைகளின் பிரகாரம் ''மாவட்ட வீதி அபிவிருத்தி இணைப்புக் குழு'' தாபிக்கப்படல் வேண்டும். |

மற்றும் மேற்பார்வை, வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களை கையளித்தலை முறைமைப்படுத்துதல் மற்றும் வீதி செயற்திட்டங்களை கையேற்றல் தொடர்பாக அமைச்சருக்கு பரிந்துரை செய்வதற்காக தாபிக்கப்பட வேண்டிய ''மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி இணைப்புக் குழு'' தாபிக்கப்பட்டிருக்க வில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 178,839 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 139,909 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 38,930 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் எழுந்திருந்த அரச மானியத்திற்கு நேரொத்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 61,496 மில்லியனால் உயர்வடைந்து சென்றமை, அபிவிருத்தி மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் ரூபா 5,264 மில்லியனால் வீழ்ச்சியடைந்து சென்றமை இதற்கான பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

| விடயம் | 2020 ஆம் ஆண்டு | 2019 ஆம் ஆண்டு | 2019 ஆம் அண்டுடன் ஒப்பிடும் போது சதவீதத்தின் வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | சதவீதம் |
| அரசாங்க மானியம் | 215,632 | 165,883 | 58 |
| வட்டி வருமானம் | 937 | 1,067 | (13) |
| அபிவிருத்தி மற்றும் பராமரிப்புச் செலவினம் | 10,257 | 15,142 | (32) |
| நிதிச் செலவினம் | 13,727 | 14,721 | (07) |
| ஊழியர் சம்பளம் | 10,287 | 8,979 | 14 |
| ஆதனங்கள், பொறிகள் பெறுமானத்தேய்வு | 39,769 | 29,582 | 34 |

பூர்த்தி செய்யப்பட்ட வீதி செயற்திட்டங்களை அதிகார சபைக்கு கையளிக்கும் போது அவ்வாறு கையளிக்கப்பட்ட சொத்துக்களுக்கு சமனான அரசாங்க மானிய வருமானம் மிகவும் கவனத்தில்

கூடிய சதவீதத்தில் உயர்வடைந்து சென்றிருந்ததுடன் நிதிச் சந்தையில் வட்டி விகிதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக நிலையான வைப்பின் அதிகரித்த வட்டி வருமானத்தை நேரொத்த ஆண்டுடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்திருந்தது.

அதிகார சபையில் அமுல்படுத்தப்பட்ட ரன் வீதி செயற்திட்டம் வீதி நிர்மாணத்திற்கான கொடுப்பனவுகள் செலவினங்களாக பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினங்கள் முன்னைய ஆண்டின் போது உயர்வடைந்து சென்றிருந்ததுடன் அது நடப்பாண்டின் போது அதற்கு சமனான நிலைமையில் காணப்பட்டது.

அதிகார சபையின் கடன் செலுத்தும் கட்டமைப்பின் விளைவாக நிதிச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொடர்ந்தும் குறைவடைந்திருந்ததுடன் அதிவேக வீதி முறைமையை விரிவுபடுத்தியமையால் புதிய ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் அதிகார சபையில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்பியமையால் ஊழியர் சம்பளத்திற்கான செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உயர்வடைந்து சென்றிருந்தது.

அதிவேக வீதி செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட வீதிகளை உள்ளடக்கிய சொத்துக்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டமையால் சொத்துக்களின் அடிப்படையில் ஏற்பட்ட ஆதனங்கள், பொறிகளின் பெறுமானத்தேய்வு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உயர்வடைந்து சென்றமை காரணமாக இருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

| | 2020 | 2019 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1.44 | 2:1.23 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1.42 | 1:1.21 |

நடைமுறை விகிதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதத்தில் குறிப்பிடக்கூடிய அதிகரிப்பு வெளிப்படுவதுடன் விரைவுச் சொத்து விகிதமும் எதிர்பார்க்கப்பட்ட ஆகக்குறைந்த மட்டத்தை அடைந்திருந்ததுடன் அதுவும் முன்னைய ஆண்டுடன் அதிகரிப்பைக் காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.12.1 (அ) இன் பிரகாரம் இடைக்கால கொடுப்பனவுனகள் மற்றும் இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் பணிகளுக்காக பொருட்கள் வழங்குதல் அல்லது சேவைகள் வழங்குதல் போதியளவான பிரகாரம் மேற்பார்வை | மகநெகும எமல்சன் கம்பனியிலிருந்து கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இந்தக் கம்பனி அதிகார சபையின் கீழான கம்பனியாக இருந்தமையால் ஏனைய தனியார் வழங்குனர்களிடமிருந்து | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் அடிப்படையில் பொருளாதார ரீதியாகவும் பணத்தின் பெறுமதி தொடர்பாகவும் கவனம் செலுத்தி பெறுகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்படாமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 60 மில்லியன் தொகையான பியுட்டிமின்ஸ் இமல்சன் கொள்வனவு செய்யும் போது அதிகார சபைக்கு ரூபா 1.3 மில்லியன் நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | கூறுவிலைகள் ஒப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் போது நட்டம் ஏற்படாதிருந்ததுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இயந்திரங்களை பயன்படுத்தியதற்காக அறவிடப்படுகின்ற பணம் மற்றும் அதிகார சபையின் profit margin அதிகார சபைக்கு கிடைக்கின்றமையால் இதன் போது நட்டமொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.4 இற்கு இணங்காத வகையில் வழங்கப்பட்ட 50 சதவீத முற்பணத் தொகையில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 100.86 மில்லியனை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கணக்காய்வு பந்தியுடன் இணங்குகின்றோம். | அதிகார சபைக்கு உரிய பணத்தை அறவிடுவதற்கோ அல்லது கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்று வதற்கோ அதிகார சபையின் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வரையறுக்கப்பட்ட சிலோன் பிஸ்கட் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட 81.8 பேர்ச் வீதி ஒதுக்கத்திற்குரிய குறித்த பிரகாரமான வாடகைப் பணம் அறவிடப்படாமை மற்றும் நிலுவை வாடகை பதிவழிக்கப்பட்டமை என்பவற்றால் அதிகார சபைக்கு ஏற்பட்டிருந்த நிதி ரீதியான நட்டம் ரூபா 8.2 மில்லியன் ஆகும். | சொத்துக்கள் முகாமைத்துவம் மற்றும் வருமானப் பிரிவின் கட்டண குழுவினால் நிலுவை வாடகைப் பணத்தை பதிவழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைக்கு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. எந்தவொரு வருமானமும் கிடைக்காத காணியொன்றை வாடகைக்கு வழங்குவதன் மூலம் அதிகார சபைக்கு நிதி ரீதியான நலனொன்று கிடைத்துள்ளது. | அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து ஆகக்கூடிய பொருளாதார நலன்களை பெறக்கூடிய வகையில் சொத்துக்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கட்டளைகள் விநியோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் முதல் அந்த சொத்துக்கள் அகற்றப்படும் சந்தர்ப்பம் வரையிலும், கட்டியெழுப்பப்படும் சொத்துக்கள் தொடர்பாக நடைமுறை வேலைகள் முதல் மூலதனமாக்குதல் வரையான தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வடக்கு அதிவேக வீதி, சீன மெட்ரோலிஜிக்கல் கம்பனியில் மேற்கொள்ளப்பட்டிருந்த செலவினங்களை மீளளிப்பதற்காக மத்திய அதிவேக வீதியின் முதலாம் கட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ரூபா 158,386 மில்லியன் தொகையில் அக்கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீதி அபிவிருத்தி அதிகார சபை நிதியத்தை வழங்குகின்ற நிறுவனமாக அன்றி 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி உரிய கம்பனியுடன் நிர்மாண ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தது. மேலும் உடன்படிக்கையில் தரப்பினர்களின் உரித்து | உரிய பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக இந்த மத்திய அதிவேக வீதியின் தொகுதி 1 இனை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை ஏற்றுக்கொள்கின்றோம். இவ்வாறான செலவினமொன்றை மீளளிப்பதற்காக உரிய ஒப்பந்தகாரர் எழுத்து மூல கோரிக்கை விடுக்காதிருந்ததுடன் அதற்கான உடன்படிக்கையும் காணப்படவில்லை. இதனிடையே இந்த செயற்திட்டத்தின் அல்லது ஏனைய மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்திற்குரிய ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய பொறுப்பொன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தகாரரால் செய்யப்பட வேண்டிய | செயற்திட்டத்தை சரியாக திட்டமிடல் மற்றும் நிதி பெறுவனவுகள் தொடர்பாக குறித்துரைத்த உறுதிப்பாடொன்றை ஏற்படுத்தியதன் பின்னர் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். மேலும் சகல செயற்திட்டங் களையும் கையளிக்கும் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அதனை மேற்கொள்ளல் மற்றும் அளவிடைப் பத்திரங்களை தயாரிக்கும் போது ஆகக்கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கடப்பாடுகள் சீன சட்டத்திற்கு இணங்குதல் தொடர்பாக 2018 ஒக்தோபர் 02 ஆந் திகதி சட்டமா அதிபரினால் முன்மொழியப்பட்டிருந்த திருத்தங்களும் அந்த உடன்படிக்கையை கைச்சாத்திடும் போது கம்பனியால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் ஒப்பந்தகாரரால் செய்ய வேண்டிய தொழில் ரீதியான இழப்பீட்டு காப்புறுதிக்காக தொகுதி பொதி 1 மற்றும் 2 இன் கீழ் முறையே ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 83 மில்லியன் தொகைகள் வேலை அளவிடைப் பத்திரத்தில் தனியான வேலை விடயமொன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது. | தொழில் ரீதியான இழப்பீட்டு காப்புறுதிக்காக பொதி 1 மற்றும் 2 இன் கீழ் முறையே ரூபா 5 மில்லியன் ரூபா 83 மில்லியன் தொகைகள் வேலை அளவிடைப் பத்திரத்தில் தனியான விடயமொன்றாக உள்ளடக்கப்பட்டிருந்தது என்ற கூற்று சரியானதாகும். | பொருளாதார நலன்கள் பெறுகை நிறுவனங்களுக்கு உரித்தாகும் வகையில் அளவிடைப் பத்திரங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மத்திய அதிவேக வீதியின் பகுதி II இற்கான ஒப்பந்தக்காரரால் நிறைவேற்ற வேண்டிய ரூபா 1,773 மில்லியன் தொகையான ஜயாமித்திக்க திட்டம் மற்றும் ரூபா 805 மில்லியன் தொகையான செயலாற்றல் பிணைமுறி என்பவற்றின் கிரயம் தனியாக வேலை விடயமொன்றாக வேலை அளவிடைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2016 மார்ச் 24 ஆந் | ஒப்பந்தங்களின் விசேட நிபந்தனைகளின் உப பிரிவுகளின் பிரகாரம் ஜயாமித்திக்க திட்டம் தவிர ஏனைய சகல திட்டங்களும் ஒப்பந்தகாரரினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதற்காக ரூபா 1,773 மில்லியன் தனியான வேலை விடயமொன்றாக வேலை அளவிடைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்ற கூற்றுடன் இணங்கமுடியாது. எனினும், காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக ரூபா 30 மில்லியன் ஊக்குவிப்புப் படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் அந்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்ற கூற்றை ஏற்றுக்கொள்கின்றோம். | அளவிடைப் பத்திரங்களை தயாரிக்கும் போது ஆகக்கூடிய பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உரித்தாகும் வகையில் அளவிடைப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் காணி கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்தி வேலை தளங்களை கூடிய விரைவில் விடுவிப்புச் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது செயற்திட்டத்திற்காக நிதியத்தை கையளித்த நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான உடன்படிக்கை யொன்று இன்றி 05 வருடங்களுக்கு அண்மித்த காலமாக செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | மத்திய அதிவேக வீதி – பகுதி III இன் சிவில் நிர்மாண நடவடிக்கைகள் எதுவும் இதுவரை ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட செயற்திட்ட செயற்பாட்டு அலகிற்காக ரூபா 834 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே காணி கைப்பற்றல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக 04 அரசாங்க நிறுவனங்களுக்கு ரூபா 32.3 மில்லியன் ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி கைப்பற்றல் நடவடிக்கைகள் மிகவும் மந்த நிலையில் காணப்பட்டது. அதன் பிரகாரம் 3,264 காணிக் கூறுகளை கைப்பற்றுவதற்கு திட்டமிடப்பட்டு அதில் 2,556 காணிக் கூறுகளுக்காக இழப்பீடாக ரூபா 4,834 மில்லியன் தொகையும், | மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் III ஆம் பகுதியின் நிர்மாண ஒப்பந்தங்களை கையளிப்பதற்கான பெறுகை நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டு முதல் சில சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட போதும், 2021 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சகல பெறுகைகளும் அரசின் தீர்மானத்தின் அடிப்படையில் அல்லது கடன் நிதியுதவி தொடர்பான இறுதி இணக்கப்பாட்டிற்கு முன்வராமையின் அடிப்படையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அரசியல் மாற்றங்கள், அதற்கு காரணமான அமைச்சரினதும் உத்தியோகத்தர்களினதும் மாற்றங்கள், நிதி ஏற்பாடு திட்டமிடப்பட்டதன் பிரகாரம் கிடைக்கப்பெறாமை, உரித்து பரிசோதனைக்காக ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு பதிலாக பிரதேச செயலாளர்கள் மற்றும் | செயற்திட்டத்தை சரியான முறையில் திட்டமிட்டு காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்க நிறுவனங்கள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கின்ற வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 98 மில்லியன் தாமத வட்டியும் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், எந்தவொரு காணிக் கூறும் இதுவரை காணி கைப்பற்றும் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்க வில்லை. | உதவி பிரதேச செயலாளர்களை ஈடுபடுத்தும் போது அவர்களின் வேலைப்பளுக்களின் காரணமாக நடவடிக்கைகள் தாமதமடைந்தமை மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாகவும் செயற்பாடுகள் மேலும் தாமதமடைவதற்கு உட்பட்டிருந்தது. தற்போது வட்டி செலுத்தப்பட்டுள்ள சகல கூறுகளும் 44 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கும் செயற்பாடுகளை துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2021.11.05 ஆந் திகதியில் 70 கூறுகளை கையளிக்கும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து செயற்திட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது. | |
| (உ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் டொலர் 5 மில்லியனை விஞ்சுகின்ற செயற்திட்டங்களுக்காக இலங்கை அரசாங்கம் மற்றும் நிதியத்தை வழங்குகின்ற நிறுவனத்திற்கிடையே எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான உடன்படிக்கை இன்றி மத்திய அதிவேக வீதி - IV ஆம் பகுதிக்காக பதவியணியினர் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் செயற்திட்டத்திற்கு நிதியத்தை வழங்குகின்ற மற்றும் நிதி வழங்குதல் தொடர்பான இணக்கப்பாடு இன்றி ஐந்து வருடங்களுக்கு | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 1/2016 இல் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கிடையே அமெரிக்க டொலர் 5 மில்லியனை விஞ்சுகின்ற செயற்திட்டத்திற்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திட வேண்டுமென விசேட குறிப்புக்கள் காணப்படவில்லை. ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் நிதி வசதிகளுக்குரிய சீனாவின் EXIM வங்கியின் மூலம் வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தமையினால் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. அதன் பின்னர் 2020 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானத்தின் | செயற்திட்டங்களை சரியாக திட்டமிட்டு காணிகளை கைப்பற்றும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்க நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்ற வேலைத்திட்ட மொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அண்மித்த காலம் செயற்திட்ட செயற்பாட்டு அலகிற்காக ரூபா 353 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே காணி கைப்பற்றல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக 04 அரசாங்க நிறுவனங்களுக்கு ரூபா 6 மில்லியன் ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி கைப்பற்றல் செயற்பாடுகள் மிகவும் மந்த கதியில் காணப்பட்டது. | பிரகாரம் மீண்டும் தனிநபர் முதலீட்டாளரிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் நிதி ரீதியான முன்மொழிவுகளை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அதற்கான பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஊக்குவிப்பு படி செலுத்தும் திட்டமுறைமையை பூர்த்தி செய்யும் போது உரிய காலத்தை விஞ்சியிருந்த போதிலும் செயற்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கில் உரிய ஊக்குவிப்பு படி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | |
| (ஊ) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான இழிவுப் பெறுமதி ரூபா 992,176 மில்லியன் ஆன ஒட்டுமொத்த சொத்துக்களில் 76 சதவீதமான ரூபா 754,747 மில்லியன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்தியது. எனினும் அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை மற்றும் அதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள மனித மற்றும் பௌதீக வளங்கள் கவனத்தில் கொள்ளக் கூடிய அளவில் காணப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறைமையாக புதிய கணனி பொதியொன்றை அறிமுகப்படுத்துவதற்கும், மனித மற்றும் பௌதீக வளங்களை தேவையான அளவிற்கு அதிகரித்தல் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தாபித்தல் மற்றும் அதற்காக போதியளவான மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றை ஒதுக்குதல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் | இந்தக் காணியில் | அதிகார சபையின் |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாமல் வீதி ஒதுக்கப் பகுதி பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்காக வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த காணி வாடகையாளர்களினால் உடன்படிக்கை செய்யப்பட்ட பணிகளுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதிகார சபை அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அவ்வாறே நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 11 ஏக்கர் 02 றூட் 38.3 பேர்ச் அளவான ரூபா 123 மில்லியன் பெறுமதியான அத்திடிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணி தொழில்பயிற்சி அதிகார சபை மற்றும் ஜேர்மன் தொழில்நுட்ப கல்லூரியினால் உரித்து கோரப்பட்டிருந்ததுடன் மிகுதி காணிப் பகுதிகளில் அனுமதியற்ற நபர்கள் குடியிருந்து வருகின்றனர். | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிருக்கின்ற காணி அளவு தவிர மிகுதி பகுதியைச் சுற்றி எல்லை மதிலொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 90 சதவீதத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | சொத்துக்கள் தொடர்பாக சரியான பாதுகாப்பு வேலைத் திட்டமொன்று நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம் ஊடாக அமுல்படுத்து வதற்கும் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட எதிர்பார்த்த பணிகளிலும் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேசிய, பிரதேச மற்றும் கிராமிய ரீதியில் 100,000 கிலோ மீற்றர்கள் மாற்று பாதை புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது குருணாகல் மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 2,743 மில்லியன் | 2019 HSR கூறுவிலையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு பின்னர் திருத்தப்பட்டிருந்தது. மீண்டும் போக்குவரத்து, பூகோள காலநிலை நிலைமைகளை கருத்தில் கொண்டு செலவினங்களை 10 சதவீதமாக மதிப்பீடு செய்திருந்த போதிலும் | பெருந்தெருக்கள் அல்லாத வீதிகளுக்காக பொருத்தமான மாதிரியை தயாரித்தலும், நிர்மாணங்கள் தொடர்பாக அதிகார சபையின் மேற்பார்வையை |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான 61 செயற்திட்டங்களில் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட 34 விடயங்கள் பெருந்தெருக்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விகிதத்தில் குறிப்பிடப்பட்ட விலை வீதத்தினை விட அதிகரித்து மதிப்பீடு செய்யப்பட்டமை, அசாதாரண அளவுகளினால் செலவின மதிப்பீடு தயாரித்தல், பொருள் போக்குவரத்துச் செலவினம் மிகை மதிப்பீடு செய்யப்பட்டமை மற்றும் தேவையினை விஞ்சி செலவின மதிப்பீடு செய்தல் போன்ற காரணங்களினால் பரீட்சிக்கப்பட்ட வீதி செயற்திட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 212.2 மில்லியனால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே வீதிகளின் மொத்த தூரம் 16.27 கிலோ மீற்றர்கள் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 278.29 மில்லியன் தொகையான 09 வீதிகள், ABC இடல் குறித்துரைத்த நியமத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. இந்த நிலைமை வீதி காலாவதியாக நேரடியாக தாக்கமளித்திருந்ததுடன் சரியான நியமம் இன்றி நிர்மாணிப்பதற்காக ஒப்பந்தகாரர்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பின்னர் நிலைமை பரீட்சிக்கப்பட்டு 05 சதவீதம் வரை குறைக்கப்பட்டு மதிப்பீடு திருத்தப்பட்டிருந்தது. அதிகார சபையின் அனுமதிப் பத்திரத்துடன் மூலப்பொருட்களை வழங்கும் இடத்தின் அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும் பின்னர் அதனை விட இலாபத்தில் தரமான மூலப்பொருட்களை பெற்றுக் கொள்ளக் கூடிய புதிய இடங்கள் கவனத்தில் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | முறைமைப் படுத்துதலும் வேண்டும். |
| (ஆ) | வீதி அபிவிருத்தி மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் பௌதீக | இதில் குறிப்பிடப்பட்ட வேலை விடயங்களை நிறைவேற்றி முடிவடைந்ததன் பின்னர் மாத்திரம் | இயலுமான வரை பொருத்தமான மதிப்பீட்டை தயாரித்தலை |

| | | | |
|---|---|---|---|
| | பரிசோதனைகளின் போது நிறைவேற்றப்படாத வேலை விடயங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 74 மில்லியனுக்காகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒரு தடவையில் பணம் செலுத்தும் முறையின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய வேலை, செயற்திட்ட பெயர் பதாதை பொருத்துதல், மோட்டார் வாகன கட்டுப்பாடு மற்றும் வேலைத்தள காப்புறுதி மேற்கொள்ளப்படாமை மற்றும் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்ட வேலைகளை நிறைவேற்றாமைக்கு கட்டளைகள் கிடைத்தல் போன்ற விடயங்கள் இதில் உள்ளடங்கியிருந்தது. | கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | அண்மையில் அபிவிருத்தி செய்து பயன்படுத்துவதற்கு பொருத்தமான நிலையில் காணப்பட்ட 50.58 கிலோ மீற்றர் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 923.91 மில்லியன் தொகை 100,000 கிலோ மீற்றர் மாற்று வீதி புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது. | உரிய உள்ளூராட்சி நிறுவனங்களை தொடர்புபடுத்துவதன் மூலம் அபிவிருத்தி செய்ய வேண்டிய வீதிகளை இனங்காணப்பட்டதுடன் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய முறை அதிகார சபையின் பொறியியலாளர்களினால் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்னர் உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்படுவதுடன் அவற்றை பராமரிப்பதற்கும் அதிகார சபையின் உதவி பெற்றுக்கொள்ள முடியும். | அபிவிருத்திக்காக வீதிகளை தெரிவு செய்யும் போது மிகவும் முன்னுரிமை வழங்க வேண்டிய வீதிகள் அதற்காக தெரிவு செய்யப்பட்டு பற்றாக்குறை வளங்களை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (ஈ) | தனியார் ஒப்பந்தக் கம்பனிகள் சிலவற்றிற்கு 2013 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்த ரூபா 103.49 மில்லியன் தொகையான வீதிகள் மற்றும் பாலங்களின் | இதற்காக பிணக்குகள் தீர்க்கும் செயற்பாடுகள் இடைநடுவில் இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தகாரருடன் 2019, 2020 ஆம் ஆண்டுகளில் உடன்படிக்கை | ஒப்பந்தங்களை கையளிப்பதற்கு முன் ஒப்பந்தக் காரர் பணிகளை பூர்த்தி செய்வதற்குள்ள இயலுமை |

| | | |
|---|---|---|
| நிர்மாண ஒப்பந்த வேலைகளின் நலிவான செயல்முன்னேற்றத்தின் அடிப்படையில் அந்த ஒப்பந்தங்கள் கைவிடப்பட்டிருந்ததுடன் அதில் வீதி நிர்மாணங்கள் அதிகார சபையின் நேர் ஊழியத்தின் அடிப்படையில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டிருந்த வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகையில் ரூபா 7.58 மில்லியன் தொடர்ந்தும் ஒப்பந்தகாரர்களின் கையில் காணப்பட்டது. மேலும், இன்னுமொரு தனியார் ஒப்பந்த கம்பனிக்கு 2012 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டிருந்த ரூபா 25.7 மில்லியன் தொகையான 03 ஒப்பந்தங்களுக்காக ஒப்பந்தகாரருடன் எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திடாமை மற்றும் வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தக் கால பகுதியில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அறவிட வேண்டிய வேலை ஆரம்பித்தல் முற்பண மீதி ரூபா 2.1 மில்லியனாக காணப்பட்டது. | கைச்சாத்திடப்படவில்லை. காலம் கடந்தமையின் அடிப்படையில் சட்டரீதியான நடவடிக்கைகளுக்கு எடுப்பதற்கு முடியாதிருந்தமையினால் அதற்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேலும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபருக்கு அனுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தொடர்பாக சரியாக இனங்காண வேண்டியிருந்ததுடன் எதிர்பார்த்த காலத்தில் ஒப்பந்த காரரினால் பணிகளை பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனினும் எதிர்பார்த்த செயல் முன்னேற்றம் காணப்படாத ஒப்பந்தகாரருக்கு மீண்டும் ஒப்பந்தம் கையளிக்க முடியாதிருந்ததுடன் காணப்படுகின்ற சட்டங்கள் அதற்காக போதியளவாக இல்லாதிருக்கு மாயின் அதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் 28.7 சதவீதமான 72,400 சதுர அடி அளவு பெருந்தெருக்கள் அமைச்சினால் | இது தொடர்பாக வரிசை அமைச்சின் தீர்மானத்தை அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது. போதியளவான நிதிஏற்பாடு | சொத்துக்கள் மற்றும் பிரிந்து செல்லும் அபாயம் மற்றும் நலன்கள் கிடைக்கின்ற |

| | | |
|---|---|---|
| பயன்படுத்துகின்ற போதிலும் அதற்கான வாடகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் செத்சிறிபாய கட்டிடத்தில் 8,290 சதுரஅடி அளவு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்தை நடாத்தி செல்வதற்காக பயன்படுத்தப்பட்டு அதற்காக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 11.49 மில்லியன் வாடகையொன்றை அதிகார சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | இல்லாமையினால் வாடகை செலுத்த முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. வரிசை அமைச்சு பயன்படுத்துகின்ற ஏனைய சொத்துக்களுடன் இந்தக் கட்டிடப் பகுதியையும் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒரே வளவில் அமைச்சு மற்றும் அதிகார சபையைத் தாபித்தல் அலுவலக நடவடிக்கைகளுக்காக இலகுவானதாகும். இந்த கட்டிடத்தில் அதிகார சபையின் சகல அலுவலகங்களுக்கான இடவசதிகள் இல்லாதிருந்தமையினால் வாடகை அடிப்படையில் வெளிக்கட்டிடமொன்று பெறப்பட்டுள்ளது. | தரப்பினரை கவனத்தில் கொண்டு சொத்துக்களை இனங்காண்பதற்கு செயற்படல் வேண்டும். சொத்துக்கள் மற்றும் பிரிவுரீதியில் பகிரப்படும் செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 28 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அந்த பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டமை முகாமைத்துவ நடவடிக்கைகளில் அதிகார சபையின் செயலாற்றல் தொடர்பிலும் நேரடியாக தாக்கமளித்திருந்தது. மேலும் அத்திகதியில் 958 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளத்திற்காக செலவிடப்பட்ட ஒட்டுமொத்த செலவினம் ரூபா 10,287 மில்லியன் ஆக காணப்பட்டது. அதற்காக பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியங்களின் பெறுமதி ரூபா 7,399.5 மில்லியன் | வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டமையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். மீளாய்வாண்டு வரையில் மிகை ஊழியர் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது. வருடாந்த நிதி ஏற்பாடு போதியளவு இல்லாமையினால் சம்பளம் செலுத்துவதற்காக அதிகார சபையின் நிதியம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | அதிகார சபையின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு ஒப்பாக பதவியணியினரை அதன் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்ப பயன்பாட்டை இலகுபடுத்துதல். |

ஆகும். மிகை ஊழியர் எண்ணிக்கையிலான ஊழியர்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த பதவியணியினருக்கான சம்பளம் செலுத்துவதற்காக மேலதிகமாக ரூபா 2,887.5 மில்லியன் தொகை அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.